# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான
## இலகுவழி மாதிரிப் பரீட்சை 1 இலிருந்து 30 வரைக்கான கடினமான வினாக்களுக்கு இலகுவழி விடைகாணும்
## ஆசிரியர் P. அம்பிகைபாகன் அவர்களின் தரம் 5 மாணவர்களுக்கு உகந்த விளக்கங்கள்

**32**

**பின்வரும் விவரத்தை வாசித்து 24 ஆம் 25 ஆம் வினாக்களுக்கு விடையை தெரிவு செய்க.**

| | | |
|---|---|---|
| 1 கிலோகிராம் அரிசி | 500 கிராம் கடலை | ரூபா 100.00 |
| 1 கிலோகிராம் கடலை | 500 கிராம் பருப்பு | ரூபா 160.00 |
| 1 கிலோகிராம் அரிசி | 500 கிராம் சீனி | ரூபா 70.00 |
| 2 கிலோகிராம் அரிசி | | ரூபா 80.00 |

24. 1 கிலோகிராம் கடலையின் விலை யாது?
1. ரூபா 120.00 2. ரூபா 80.00 3. ரூபா 60.00 4. ரூபா 40.00

25. ஒரு கிலோகிராம் பருப்பின் விலை யாது?
1. ரூபா 60.00 2. ரூபா 80.00 3. ரூபா 40.00 4 ரூபா 30.00

**01. பரீட்சை எண் : 04**

**வினா இலக்கம் - 24 - 25**

விளக்கம் :

| | |
|---|---|
| **ரூபா** | $80 \div 2 = 40$ |
| **1kg அரிசி ரூபா 40** | |
| **500g கடலை** | $100 - 40 = 60$ |
| **1kg கடலை** | $60 \times 2 = 120$ |

| | |
|---|---|
| **500g பருப்பு** | $160 - 120 = 40$ |
| **1kg பருப்பு** | $40 \times 2 = 80$ |

---

26 ஒரு நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு அதன் வெள்ளிவிழா 2000 ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. அவ் வேளை அவ்விழாவில் பங்குபற்றிய லதாவின் வயது 12 ஆகும். அந்நிறுவனத்தின் நூற்றாண்டு விழா நடைபெறும் போது லதாவிற்கு எத்தனை வயதாகும்?
1. 100 வயது 2. 75 வயது 3. 87 வயது 4. 38 வயது

**02. பரீட்சை எண் : 04**

**வினா இலக்கம் - 26**

விளக்கம் :

**25 ஆவது ஆண்டு வெள்ளிவிழா : 2000**
**100ஆவது ஆண்டு நூற்றாண்டுவிழா : 2075**

**வெள்ளி விழாவில் லதாவின் வயது 2000 இல் 12 ஆண்டுகள்**
**நூற்றாண்டு விழாவில் வயது 2075 இல்** $75 + 12 = 87$

---

27. மூன்று குயவர்கள் மூன்று மணித்தியாலங்களில் முப்பது பானைகள் செய்வார்கள். ஆகவே ஒரு குயவர் இருபது பானைகள் செய்வதற்கு எத்தனை மணித்தியாலங்கள் செலவாகும்?
1. 2 மணித்தியாலங்கள் 2. 3 மணித்தியாலங்கள்
4. 5 மணித்தியாலங்கள் 4. 6 மணித்தியாலங்கள்

**03. பரீட்சை எண் : 04**

**வினா இலக்கம் - 27**

விளக்கம் :

| குயவர்கள் | மணித்தியாலங்கள் | பானைகள் |
|---|---|---|
| 3 | 3 | 30 |
| 1 | 3 | 10 |
| 1 | 6 | 20 |

**6 மணித்தியாலங்கள்**

---

29. ஒரு வகுப்பில் உள்ள 4 நண்பர்கள் தமக்கிடையில் ஒருவருக்கொருவர் கைகுலுக்கிக் கொண்டார்கள். அங்கு இடம்பெற்ற கைகுலுக்கல்களின் எண்ணிக்கை யாது?
1. 4 2. 6 3. 8 4. 16

**04. பரீட்சை எண் : 04**

**வினா இலக்கம் - 29**



விளக்கம் :

| | முதலாமவர் | இரண்டாமவர் | மூன்றாமவர் | நான்காமவர் |
|---|---|---|---|---|
| கைகுலுக்கல்கள் | 3 | 2 | 1 | |

உருவிலுள்ள எண்யந்திரம் செலுத்தும் எண்ணை 3 இனால் பெருக்கி கிடைக்கப் பெறும் விடையிலிருந்து 2 ஐக் கழித்து வரும் விடையுடன் 5 ஐக் கூட்டித் தரும்.




30. இவ்வியந்திரத்தினுள் 2 ஐச் செலுத்தினால் கிடைக்கும் விடை யாது?
1. 7 2. 8 3. 9 4. 10

31. இவ்வியந்திரத்தின் மூலம் 18யை விடையாகப் பெறுவதற்கு உட்செலுத்த வேண்டிய எண் யாது?
1. 3 2. 5 3. 7 4. 4

**05. பரீட்சை எண் : 04**

**வினா இலக்கம் - 30 - 31**

விளக்கம் :

| | | |
|---|---|---|
| 2×3−2+5=9 | | |
| 6 | 4 | 9 |
| ×3 | −2 | +5 |

**மாற்றுக் கணிப்புக்கள்**

(18-5+2÷3=5)

| ÷3 | +2 | −5 |
|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| | ÷ 3 | + 2 | − 5 | 18 |
| 5 | | 15 | 13 | |

28. எட்டுப்பேர் 4 நாட்களில் செய்துமுடிக்கும் வேலையை இருவர் எத்தனை நாட்களில் செய்வார்கள்? (................................)

29. காலை 8:00 மணிக்கு பயணத்தை ஆரம்பித்த ஒருவர் அன்றைய தினம் மாலை 3:00 மணிக்கு பயணத்தை முடித்துக் கொண்டார். அவர் பயணத்தில் செலவிட்ட மணித்தியாலங்கள் எத்தனை? (..............................)

**06. பரீட்சை எண் : 05**

**வினா இலக்கம் : 28 - 29**

விளக்கம் :

**8 பேர் X 4 நாட்கள் = 32 பேர் நாட்கள் வேலை**
**32 பேர் நாட்கள் வேலை ÷ 2 = 16 நாட்கள்**

**காலை 8.00 _____ நண்பகல் 12.00 வரை**
**12.00 − 8.00 = 4 மணித்தியாலங்கள்**
**மாலை 3.00 (4+3) = 7 மணித்தியாலங்கள்**

**நியம நேரத்தில் காலை 8.00 ______ 08.00**
**மாலை 3.00 ______ 15.00**
**15.00 − 08.00 = 7 மணித்தியாலங்கள்**

40. இக் கோலத்திற்கேற்ப அடுத்ததாக இடப்பட வேண்டிய உருவைத் தெரிவு செய்க.




1 2 3

**07. பரீட்சை எண் : 05**

**வினா இலக்கம் : 40**

விளக்கம் : **தாயக்கட்டை (சதுரமுகி) இடஞ்சுழியாக நகர்கின்றது.**

**முதல்நிலை** **இரண்டாம் நிலை** **மூன்றாம் நிலை** **நான்காம் நிலை**



**வடக்கு நோக்கி** **மேற்கு நோக்கி** **தெற்கு நோக்கி** **கிழக்கு நோக்கி**

11. பின்வரும் நெய்யரியில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு எத்தனை சதுரங்களுக்கு சமம்?



சதுரங்கள் (......................)

**08. பரீட்சை எண் : 06**

**வினா இலக்கம் : 11**

விளக்கம் :

| | அரைச் சதுரங்கள் | முழுச்சதுரங்கள் |
|---|---|---|
| முதல்நிரை | 2 | 00 |
| இரண்டாம் நிரை | 2 | 02 |
| மூன்றாம் நிரை | 2 | 04 |
| நான்காம் நிரை | 2 | 06 |

**அரைச்சதுரங்கள் 8 = முழுச்சதுரங்கள் : 4**

**மொத்தம்** = 2+4+6+4=16 **சதுரங்கள்**

---

12. இவ்வுருவை சதுரமாக்குவதற்கு இவ்வுரு போன்ற எத்தனை உருக்களை இதனுடன் சேர்க்க வேண்டும்? (.......................................)




13. இவ்வுருவின் நீளப்பக்கத்தின் நடுவில் நேர்கோடு கீறி இரு உருக்களாகப் பிரித்தால் தோன்றும் இரு வடிவங்களையும் எவ்வாறு அழைக்கலாம்?

**09. பரீட்சை எண் : 06**

**வினா இலக்கம் : 12 , 13**

விளக்கம் : **நீளம் 20cm அகலம் 10cm**

**அகலம் 20cm ஆக இன்னொரு உரு சேர்க்க வேண்டும்**



**இரண்டு சதுரங்கள் உருவாகும்**

---

14. இவ்வுருவின் நிழற்றப்பட்ட பகுதியை பின்னமாக எழுதுக.



**10. பரீட்சை எண் : 06**

**வினா இலக்கம் : 14**

விளக்கம் : $\frac{3}{8}$



---

15. உருவில் உள்ள இம்முக்கோணியின் சுற்றளவு 45cm ஆகும். பக்கம் AB யின் நீளம் 10cm உம் பக்கம் BC யின் நீளம் 15cm உம் ஆகும். எனவே பக்கம் AC யின் நீளம் யாது?




**11. பரீட்சை எண் : 06**

**வினா இலக்கம் : 15**

விளக்கம் :

| **சுற்றளவு** | | AB | | BC | | CA | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 45cm | = | 10cm | + | 15cm | + | (45-25=20)cm | = | 45cm |

---

32. ஒரு மனிதனிடம் ஐந்து ரூபாய் நாணயங்களாகவும், பத்து ரூபாய் நாணயங்களாகவும் ரூபா.65 உள்ளது. அதில் இருக்கத்தக்க ஐந்து ரூபாய் நாணயங்களின் எண்ணிக்கை யாது?

1. 4 2. 6 3. 7

**12. பரீட்சை எண் : 06**

**வினா இலக்கம் : 32**

விளக்கம் : **ரூபா 65 உள்ளபடியால் ஐந்து ரூபாய் நாணயங்கள் இரட்டை எண்ணில் வர முடியாது எனவே விடை 7 பொருத்தமானது.**

---

33. இன்று வெள்ளிக்கிழமை, நாளைய மறுநாள் 12ந் திகதி எனவே சென்ற வெள்ளிக்கிழமை எத்தனையாம் திகதி?

1. 2ந் திகதி 2. 3ம் திகதி 3. 5ந் திகதி

**13. பரீட்சை எண் : 06**

**வினா இலக்கம் : 33**

விளக்கம் :

| **இன்று வெள்ளி** | **நாளை** | **நாளைய மறுநாள்** |
|---|---|---|
| **10** | **11** | **12** |
| **-7** | | |
| **03 சென்ற வெள்ளி** | | |

---

34. ஒரு வாங்கில் நானும் நண்பர்களும் அமர்ந்து இருக்கின்றோம். வலது பக்கத்திலிருந்து எண்ணினால் நான் ஐந்தாவதாகவும் இடது பக்கத்திலிருந்து எண்ணினால் நான் ஏழாவதாகவும் இருக்கின்றேன். நாங்கள் எத்தனை பேர் வாங்கில் அமர்ந்திருக்கின்றோம்?

1. 10 பேர் 2. 11 பேர் 3. 12 பேர்

**14. பரீட்சை எண் : 06**

**வினா இலக்கம் : 34**

விளக்கம் :




4 + 1 + 6 = 11 **பேர்**

---

35 சூரியன் மறையும் வேளை நான் எத்திசை நோக்கிச் சென்றால் எனது நிழல் எனக்கு வலதுபக்கம் விழும்?

1. வடக்கு 2. தெற்கு 3. கிழக்கு

**15. பரீட்சை எண் : 06**

**வினா இலக்கம் : 35**

விளக்கம் :




---

36. சாதாரண வருடம் ஒன்றில் தைமாதம் முதலாம் திகதியிலிருந்து பங்குனி மாதம் 31ந் திகதி வரையிலுள்ள நாட்களின் எண்ணிக்கை யாது?

1. 90 நாட்கள் 2. 91 நாட்கள் 3. 92 நாட்கள்

**16. பரீட்சை எண் : 06**

**வினா இலக்கம் : 35**

விளக்கம் : **சாதாரண வருடம் 365 நாட்கள் கொண்டது**
**மாசி மாதம் 28 நாட்கள்**
**எனவே தை 31 நாட்கள்**
**மாசி 28 நாட்கள்**
**பங்குனி 31 நாட்கள் மொத்தம் = 90 நாட்கள்**

---

**ஒரு மின் அலங்காரச்சோடனையில் சிவப்பு, பச்சை, மஞ்சள் என மூன்று வகையான மின்குமிழ்த் தொடர்கள் ஒழுங்கில் ஒளிர்ந்து கொண்டிருந்தன.**

22. அவற்றுள் 18 ஆவது மின்குமிழின் நிறம் யாது?

1. சிவப்பு 2. பச்சை 3. மஞ்சள்

23. அச்சோடனைத் தொடரில் 28 மின் குமிழ்கள் காணப்பட்டன ஆயின் அங்கிருந்த சிவப்பு நிற மின்குமிழ்களின் எண்ணிக்கை யாது?

1. 9 2. 10 3. 12

**17. பரீட்சை எண் : 07**

**வினா இலக்கம் : 22, 23**

விளக்கம் : **1 2 3**
**சிவப்பு பச்சை மஞ்சள்**
**எத்தனையாவது மின்குமிழ் ஆயினும் அவ்வெண்ணை 3 நிறமாகையால் 3 ஆல் வகுத்து 1 மீதி வந்தால் சிவப்பு, 2 மீதி வந்தால் பச்சை, மீதி வராவிட்டால் மஞ்சள்**
**எனவே 18 ÷ 3 = 6 மீதி இல்லை எனவே மஞ்சள்**
**28 ÷ 3 = 9 மீதி 1 எனவே சிவப்பு வகுத்தால் 9 சிவப்பு மீதி 1 சிவப்பு**
**9 + 1 = 10 சிவப்பு மின்குமிழ்கள்**

---

**ஒரு பண்ணையில் உள்ள மாடுகளினதும், கோழிகளினதும் எண்ணிக்கை 12 ஆகும். அவற்றின் கால்களின் எண்ணிக்கை 32 ஆகும்.**

24. பண்ணையில் உள்ள கோழிகளின் எண்ணிக்கை யாது?

1. 4 2. 8 3. 12

25. பண்ணையில் உள்ள மாடுகளின் எண்ணிக்கை யாது?

1. 4 2. 8 3. 12

**18. பரீட்சை எண் : 07**

**வினா இலக்கம் : 24, 25**

விளக்கம் : **12 கோழிகளாயின் 12X2 =24 கால்கள் கூடுதலாக இருப்பது 32-24 =8 கால்கள்**
**8 ÷ 2 = 4 கோழிகள் மாடாகும். எனவே 12 - 4 = 8 கோழிகள்**
**இதை போன்று வேறொரு முறையிலும் விடை காணல்.**
**12 மாடுகளாயின் 12 X 4 = 48 கால்கள் குறைவாக இருப்பது 48 - 32 = 16 கால்கள்**
**16 ÷2 = 8 மாடுகள் கோழிகளாகும். எனவே 12 - 8 = 4 மாடுகள்**
**12 - 4 = 8 கோழிகள்**